

நாரையின் வெகுமதி

ஜப்பானிய நாட்டுப்புற கதை





நீண்ட காலத்திற்கு முன்பு, வயதான கணவரும் மனைவியும் வடக்கு ஜப்பானின் உயரமான மலை பிரதேசத்தில் எளிமையாக வசிதது வந்தார்கள். ஒருவருக்கொருவர், நேசமுடனும், கனிவுடனும், இருந்ததும், எல்லா உயிரினங்களையும் மதித்து வாழ்ந்து வந்ததும் அருகில் இருந்தவர்களுக்குத் தெரியும்.

இருவரும் மிக்க மகிழ்ச்சியாக இருந்தபோதிலும், சில நேரங்களில் வாழ்க்கையில் தனிமையை உணர்ந்து, ஒரு குழந்தை, அதுவும், ஒரு மகள் வேண்டும் என்று விரும்பினார்கள்.

ஒவ்வொரு நாளும் அந்த முதியவர் மலைகளுக்குச் சென்று அங்கிருந்து விறகுகளைச் சேகரித்து, அதை எரித்து நிலக்கரி செய்வார். மாதத்திற்கு ஒரு முறை நகரத்திற்குச் சென்று தான் தயாரித்த நிலக்கரியை விற்று, தன் மனைவிக்கும், தனக்கும் வாழ்வதற்கான பொருளாதாரத்தைச் சம்பாதித்தார்.

குளிர்காலம் வரும்போது, மலைகளையும், வயதான தம்பதியினரின் வீட்டைச் சுற்றியும் மென்மையான வெள்ளை பனி பெய்து, பனியின் வெள்ளைத் தாள்கள் பல மைல்களுக்குப் படர்ந்திருக்கும். அடர்த்தியான, இருண்ட மேகங்கள் கவிழ, கடந்த பருவங்களின் அனைத்து வண்ணங்களும் சேறும் சக்தியுமாக மாறிவிடும்..

மிக்க பனி பெய்து உறைந்த ஒரு மாலையில் மலைகளில் சில்லென்று வீசிய காற்றின் வேகமும், குளிர்ச்சியும் இன்னும் அதிகரிக்க, முதியவர் தனது நிலக்கரியை, நகர மக்களுக்கு விற்றுவிட்டு மிக்க சோர்வுடன் திரும்பி வந்துக் கொண்டிருந்தார். குளிரில் நடுங்கிக் கொண்டு, குளிர்காய தன் வீட்டை நோக்கி, தன் மனைவியிடம் போகும் அந்த மலைப்பாதையில் நிதானமாக நடந்து போய் கொண்ட்ரிருந்தார். திடீரென்று, அவதியில் இருக்கும் ஒரு பறவையின் அலறல் கேட்டது.

"இந்த குரல் எங்கிருந்து வருகிறது?", கிழவர் தனக்குத்தானே கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து பெய்துக் கொண்டிருந்த பனி திரையின் ஊடெ பார்த்த போது ஒரு வேட்டைக்காரனின் வலையில் சிக்கி இருந்த அழகான வெள்ளை நாரை ஒன்றைக் கண்டார். வெளிவற எவ்வளவு கடினமாக முயற்சித்ததோ அவ்வளவு கெட்டியாக அந்த வலையில் சிக்கிக் கொண்டது. நாரை தப்பித்து வெளிவர முடியாது என்பது மிக தெளிவாயிற்று.

வயதானவர் நாரையை நோக்கி போய்க் கொண்டே, “ஓ, பறவையே! நீ பாவம். இந்த நிலையில் உன்னை யாராவது பார்த்துவிட்டால் நிச்சயமாகப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்”, என்று மிருதுவாக சொன்னார். பிறகு முழங்காலிட்டு அமர்ந்து, வலையை பிரிக்கத் தொடங்கினார்



பிறகு மென்மையான குரலில், “கவலை படாதே, நான் உதவ தான் வந்திருக்கிறேன். காலில் காயம் ஏற்பட்டது போல் இருக்கிறது” என்று சொன்னார்.

புரிந்தமாதிரி அந்த பறவை அப்படியே நின்றது. மேலும், அவரை ஆறுதல் படுத்துவது போல் அவரது கன்னத்திற்கு எதிராக தன் தலையை வைத்து அமைதியாக, மகிழ்ச்சியுடன் ஏதோ சப்தம் செய்துக் கொண்டிருந்தது.

வலையிலிருந்து விடுபட்ட நாரை தன் சிறகுகளை மடக்கி, முன்னோக்கி ஓடி, பின்னர் பனிபடிந்த வானத்தில் பறந்தது. உயரத்தில் சென்றதும் வயதானவரை இறுதியாக பார்ப்பது போல் தன் தலையைத் திருப்பும் போது, அதனிடமிருந்து உரத்த சப்தம் கேட்டது;

“நன்றி”, என்று நாரை சொல்லுவதாக அந்த பெரியவர் உணர்ந்தார்.

நாரை அவரது தலைக்கு மேல் மூன்று முறைகள் வட்டமிட்டு விட்டு கடைசியில் பறந்து போய்விட்டது.. நாரை சிறியதாகிக் கொண்டே தொலைவில் மலைகளுக்கப்பால் மறையும் வரை பனி மூடிய ஆகாயத்தை அவர் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

அங்கே குளிர்ந்த பனியுடன் காற்றும் வலுவாக வீசிய போதும் அவர் மகிழ்ச்சியில் உற்சாகமாக இருந்தார்

ஒரு நல்ல கரியம் செய்தால் யாவருக்கும் இப்படிதான் நிறைவாக இருக்கும் என்று எண்ணினார். ஒரு நாரையின் உயிரைக் காப்பாறியதின் மூலம் மன நிறைவான காரியம் செய்ததின் சந்தோஷம் அவருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

மாலையில், சூடான நெருப்பின் அருகில் உட்கார்ந்துக் கொண்டு, அந்த வயதானவர் தனது மனைவியிடம் பகலில் தான் செய்த உபகாரத்தைப் பற்றி கூறி, "அந்த நாரை எவ்வளவு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருந்தது!", என்றார்.

அதன் பின்னர், அவர் நகரத்தில் சந்தித்த நபர்களைப் பற்றியும், நாள் முழுவதும் நடந்ததையும் கூறிவிட்டு படுக்கைக்குச் செல்லவிருந்த சமயம் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது.

"இவ்வளவு கடுமையான இரவில் நம் வீட்டிற்கு யார் வந்திருக்ககூடும்?" என்ற கிழவி, "கணவர் தேவ், இந்த பனி உறைந்த, இவ்வளவு குளிரில் யார் வந்திருக்கிறார்கள் என்று பாருங்கள்", என்றாள்.

கிழவர் வாசலுக்குச் சென்று கதவைத் திறந்ததும், அழகான ஒரு பெண் நிற்பதைப் பார்த்து ஆச்சரியம் உண்டாயிற்று. அவள் ஆடம்பரமான வெள்ளை நிற கிமோனோ அணிந்திருந்தாள். அவளுடைய நீண்ட கருங் கூந்தல் இடுப்புவரை தொங்க, மெருகேறிய அவளது தோல் வெள்ளை பீங்கான் போல் ஒளிர்ந்தது.



இந்த அகால நேரத்தில் உங்களை தொந்திரவு செய்வதற்கு மிக்க வருந்துகிறேன்”, என்று தன் மெல்லிய குரலில் கூறினாள். “அடுத்த ஊரில் வசிக்கும் என் உறவுகாரர்களைச் சந்திக்க வந்த நான், இந்த பயங்கரமான பனிபுயலில் வழி தவறிவிட்டேன் போலிருக்கிறது. இந்த ஒரு இரவு மட்டும் உங்களுடன் தங்க அனுமிதிக்க முடியுமா”, என்று கேட்டாள் அவள்.


வாசலில் நின்று கொண்டிருந்த அவள் உதட்டில் புன்சிரிப்பு படர்ந்திருந்தது. கடும் குளிரால் வெடவெடக்க நின்ற அவளுடைய கைகள் நடுங்குவதை கிழவரும் அவருடைய மனைவியும் பார்க்க முடிந்தது.

இரக்கதுடன் “ வா, குழந்தாய், உள்ளே வந்து, தணல் அருகில் அமர்ந்து குளிர்காயலாம்”, என்று சொன்ன கிழவர், “எங்களுடன் ஒரு இரவு இங்கே தங்கலாம்” என்று முடித்தார்.

:எத்தனை நாட்கள் விருப்பமோ அத்தனை நாட்கள் நீ எங்களுடன் இருக்கலாம்”, என்று நேசத்துடன் கிழவியும் கூறினார்.

தன் உடைகளிலிருந்த பனியை உதறி தள்ளி விட்டு, கால்களைத் துடைத்துக் கொண்டே, “உங்கள் உபசாரணைக்கு மிக்க நன்றி. உண்மையாகவே எவ்வளவு நாட்கள் வேண்டுமானாலும் நான் இங்கேயே தங்க முடியுமா?, என்று அந்த சிறுமி கேட்டாள்.

“ஆமாம், நிச்சயமாக உனக்கு வேண்டும் வரை எங்களுடன் தங்கலாம்”, என்று கூறினார் அந்த முதியவர். பிறகு, கிழவி, “நெருப்பின் அருகே வந்து துணிகளை உலரவைக்கவும் மூழு இரவும் நன்றாக தூங்கி காலையில் மேற்கொண்டு பேசலாம்”, என்றார். அவ்வளவு பனி பெய்ததில் மறுநாள் கதவைத் திறக்கக் கூட முடியவில்லை. அடுத்து வந்த ஐந்தாறு நாட்களிலும் விடாமல் தொடர்ந்து பனி பொழிந்துக் கொண்டிருக்கவே அந்த பெண் இவர்களுடனேயே தங்கினாள். தான் இவர்களுடைய பரோபகரத்திற்குக் கைமாறாக என்ன செய்யலாம் என்ற யோசனையில் அவள் இருந்தாள்.



“நான் உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்”, என்று சொன்ன அவள் சற்றே தயங்கினாள். தங்களுடைய இளம் மகள் போல் தோற்றமளித்த அவளை மனம் விட்டு பேசும்படி ஊக்கினார்கள்.

“தாராளமாக சொல்லலாம்; உனக்காக நாங்கள் எதாவது செய்ய முடியுமா”, என்று கேட்டார்கள் அந்த தம்பதிகள்.

அந்த இளம் பெனண், தன் பெற்றோரை எப்படி இழந்தாள் என்றும், அதன்பிறகு அவர்கள் வீட்டு கதவை தட்டிய அன்று அடுத்த ஊரில் வசிக்கும் ஏதோ உறவினர்கள் வீட்டிற்குப் போகும் போது பனிபுயலில் வழி தவறி யதேச்சியாக அவர்களிடம் வந்து சேர்ந்ததையும் விவரமாக சொன்னாள்.

“தவிர, அவர்கள் ஒரு போதும் உங்களைப் போல் என் பெற்றோர்களுக்கு ஈடாக, இவ்வளவு கருணையுடன் இருந்திருக்க முடியாது . ஏதோ ஒரு நல்ல காலம் தான் என்னை உங்களிடம் கொண்டு வந்திருக்க வேண்டும். உங்கள் மகளாக நான் உங்களுடன் தங்க முடியுமா?’’, என்று கேட்டாள்.

பெற்றோர்களின் இழப்பால் எவ்வளவு தனிமையில் இருக்கிறாய்; உன்னை போல் ஒரு கனிவான, புத்திசாலி பெண் எங்கள் மகளாக இருப்பதில் நாங்கள் இருவரும் மிக்க மகிழ்ச்சி அடைவோம் என்று அவர்கள் கூறினார்கள்.

இத்தனை பாசத்தை அவர்கள் இருவரும் வெளியிட்டப் பிறகு, அந்த குமரிபெண் அந்த தம்பதியுடன் அவர்களுக்கு பிறக்காத பெண்ணாக வாழத் தொடங்கினாள். அதனால் அவர்கள் இருவரும் எத்தனை மகிழ்ச்சி அடைந்தார்கள் என்று அந்த பெண்ணிற்குத் தெரியாது.

குளிர்காலம் கடந்து வசந்தம் வந்ததும், செரி மரங்களில் பூத்த பூக்கள், அந்த கிராம பகுதி முழுவதையும் வெளிர்சிவப்பு நிற கொத்துகளாக மாற்றியபோது, அந்தப் பெண் முதியவரிடம் மறுபடியும் ஒன்றை வேண்டினாள்.

“நான நெசவு செய்ய விரும்புகிறேன். உங்கள் வீட்டில் ஒரு தறி இருக்கிறதா என்று கேட்டாள்.

“ஆம், எங்களிடம் இருக்கிறது; என் மனைவி, சிறு வயதில், துணியை நெசவு செய்ய பயன் செய்த தறி அது”, என்றார் முதியவர்.

பின் அவர் தறியை வைத்திருந்த அறையைக் காண்பித்தார். வண்ணமயமான நூல்களால் நிரப்பப்பட்ட பல சுருள்கள் இருந்தன.

அப்போது அந்தப் பெண், “ உங்களிடம் முக்கியமான ஒன்றைக் கேட்டுகொள்கிறேன்; நான் தறியில் வேலை செய்யும் போது நீங்கள் இருவருமே இந்த கதவை ஒருபோதும் திறக்க மாட்டீர்கள் என்ற உறுதியளிக்க வேண்டும்”, என்றாள்.

தாங்கள் அப்ப்டியே செய்வதாக அவர் உறுதியளித்த போதிலும் இது ஒரு விசித்திரமான கோரிக்கை என்பதை உணர்ந்தார்.

"தயவு செய்து, இப்போது நீங்கள் வெளியேறி கதவைப் பூட்டிவிடுங்கள்" என்று பணிவுடன் கூறினாள் அந்த பெண்.

அந்த இளம் பெண் இரவும் பகலுமாக ஒருபோதும் ஓய்வெடுக்கவோ சாப்பிடவோ இல்லை. மூடிய கதவின் மறுபுறத்திலிருந்து , கிழவரும், அவரது மனைவியும் தறி ஓடுவதின் சில சீரான சப்தங்களைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள்.

இளம் பெண் நெசவு செய்யத் தொடங்கிய மறுநாளே, தறியின் சத்தம் திடீரென நின்றுவிட்டது. வயதான தம்பதியினர் என்ன நடந்தது என்பதை கிரகித்துக் கொள்ளும் முன்பே, அறையின் வாசலில் கையில் ஒரு துணி சுருளுடன் அந்த பெண் வந்து நின்றாள்.



எவ்வளவு அழகான துணி! இதுவரை எங்கள் திருமண வாழ்க்கையில் நாங்கள் பார்த்தேயில்லை", என்று இருவரும் ஆச்சரியம் அடைந்தார்கள்.

அவர்களுக்காகவே நெய்ததாகவும், மறு நாள் அதை ஊருக்குள் எடுத்துப் போய் விற்றால் நல்ல விலை கிடைக்கும் என்றும் தான் நம்புவதாகச் சொன்னாள்.

மறு நாள் அந்த முதியவர் ஊருக்குள் சென்று, "துணி, துணி! இந்த அழகான துணியைப் பாருங்கள்; யார் வாங்க வருகிறீர்கள்", என்று கூவினார்.

இந்த துணியைப் பார்த்த ஒவ்வொருவரும் அதன் தரம், மற்றும் அழகைப் பார்த்து வியப்படைந்தார்கள்.

அங்கிருந்த ஒரு குடிமகன், "ஐயா இது சாதாரண துணி இல்லை; உயர்ந்த பட்டு துணி. இது போன்ற அழகான வேலைபாட்டுடைய ஜரி வஸ்தரத்தை நான் இதுவரை என் வாழ்க்கையில் பார்த்ததேயில்லை", என்றவன், "வாஸ்தவமாக, இதை நாம் இருவரும் அரண்மனைக்கு எடுத்துச் சென்றால் பிரபுவிற்குக் காண்பிக்கலாம்", என கூறினான்.


இவ்வளவு நேர்த்தியான ப்ரோகேடைப் பார்த்தவுடன் அவர் ஆச்சரியப்பட்டார். "இது மிகமிக அழகாக இருக்கிறது. இந்த துணியில் என் மகளுக்கு ஒரு அற்புதமான கிமினோவை உருவாக்க முடியும். உங்களிடமிருந்து இதை நான் வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

கனிந்த வார்த்தைகளைச் சொன்ன பிரபு அந்த முதியவருக்கு ஒரு பெரிய தொகையை தங்க நாணயங்களாகக் கொடுத்தார்.

"தயவு செய்து மறுபடியும் கட்டாயம் வரவேண்டும்; உங்கள் துணி மிகவுமே அழகானது. நீங்கள் கொண்டுவரும் அனைத்தையுமே வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

வயதானவர் வீட்டிற்கு வந்தவுடனேயே தனது மனைவியிடமும், அந்த பெண்மணியிடமும் எப்படி எல்லா துணிகளையும் அரண்மனையில் விற்க முடிந்தது என்று தெரிவித்தார்.





வசந்த காலம் முடியவும், கதகதப்பான கோடைகாலம் வரவும் மழை கிராமபுறத்தை வண்ணங்களால் நிரப்பியது. காலையில் நீலமும், இளம் சிவப்புமாக மலர்ந்திருந்த பூக்கள் முதல் கரும் நீலமும் ஊதா நிறமுமாகக் காணப்பட்ட ஐரிஸ் மற்றும் ஹைட்ரேஞ்சா போன்ற வெவ்வேறு பூக்களை கலை உணர்வுடன் இணைத்து பரப்பி இருந்த காட்சி புத்துணர்ச்சி ஊட்டியது.

ஆனால் காலையில் இருந்து இரவு வரை ஓய்வில்லாமலும், சாப்பிடாமலும் தொடர்ந்து வேலை செய்த அந்த பெண்ணுக்கு இந்த பருவங்களின் மாற்றத்தை உணர வாய்ப்பில்லை. கதவின் மறுபுறம், வயதான மனிதனும் அவரது மனைவியும் தறி ஓடுவதின் சீரான சப்தங்களைக் தொடர்ந்துக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

இளம் பெண் தறியில் எப்படி வேலை செய்கிறாள் என்பதை முதிய தம்பதிகளுக்கு கற்பனை செய்ய முடிந்தது. ஒரு அழகான ஜரி வஸ்திரத்தை, அவள் நெய்யும் திறமையைப் பார்க்கும் சபலத்தை அடக்குவது கடினமாக இருந்தது. இருந்தும் அவள் வேலை செய்யும் போது அவர்கள் உள்ளே பார்க்க மாட்டார்கள் என்ற வாக்குறிதியையும் அவர் மறக்கவில்லை.

பல நாட்களுக்குப் பிறகு அறையிலிருந்து வெளியே வந்த அவள், சோர்வுடன் மிக்க பலவீனமாகவும் இருந்தாள். ஆனால் அவளுடைய கையில் ஒரு ஜ வஸ்திரம் இருந்தது. இதற்கு முன்பு அவள் நெய்த துணியை விடவும் அழகாக இருந்தது. கிழவர் அதை நகரத்திற்கு எடுத்துக்கொண்டு போய் அரண்மனை பிரபுவிடம் காட்டினார்.

அந்த ஜரி வஸ்திரத்தைப் பார்த்து மிக்க மகிழ்ச்சியடைந்த பிரபு, முன்பை விட அதிகமாகக் கொடுத்த பணத்தைக் கிழவர் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டார்.

கிழவர் திரும்பிச் செல்லத் தொடங்கியதும், “ஐயா, என் மகளுக்குக் கோடையில் திருமணம் நடக்கப் போகிறது. அதற்காக பிரத்யேகமாக ஒரு சிறந்த கிமோனோ செய்ய ஜரி வஸ்திரம் கொண்டு வர முடியுமா? " என்று அவர் கேட்கவும் முதியவர் மிக்க மகிழ்ச்சியுடன் அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டார்

இரண்டாவது முறை துணியை விற்று பணத்தைப் பெற்ற பிறகு கிழவரும் அவரது மனைவியும் பணக்காரர் ஆனார்கள். அவர்களது வாழ்க்கை முன்பை விட வசதியுடன் இருந்தது. ஆனால், நாளுக்குநாள் அந்த இளம் பெண் முன்பு போல் இல்லாமல், இளைத்து, சோகை பிடித்து மிக்க பலவீனமாகத் தோற்றமளித்தாள். அவளுக்குள் இருந்த ஆற்றல் குறைந்து கொண்டே இருந்தது.

சிறுமியைப் பற்றி கவலைப்பட்ட முதியவர், ஒரு நாள் அவளிடம், “உங்களைப் பார்த்தால் பலஹீனமாக இருக்கிறீர்கள்; மிகவும் கடினமாக உழைத்து, காலை முதல் இரவு வரை துணிகளை நெசவு செய்கிறீர்கள். உங்களுக்குக் கொஞ்சம் ஓய்வு தேவைப்படுகிறது”, என்றார்.

அவள் அன்பு புன்னகையுடன், “நான் நலமாகத்தான் இருக்கிறேன்”, என்று கூறினாள். நான் நெய்வதற்கு இன்னும் சிறிதளவே இருக்கிறது. “ உங்களிடம் முக்கியமான ஒன்றைக் கேட்டுகொள்கிறேன்; நான் தறியில் வேலை செய்யும் போது நீங்கள் இருவருமே இந்த கதவை ஒரு போதும் திறக்க மாட்டீர்கள் என்ற மற்றுமொரு முறை உறுதியளிக்க வேண்டும்”, என்று கூறினாள்.



அன்றிரவு அவரது மனைவியும் அவரும் குளிர் காயும் போது, அந்த யதானவர் இளம் பெண்ணின் உடல்நிலை குறித்து தனது கவலையை வளிப்படுத்தினார். “அவளைப் பற்றி எனக்கும் அதே விசாரம் தான்” என்ற வருடைய மனைவி, தறியின் சப்தங்களைக் கேளுங்கள்; “இந்த வேலை டினமானது, இந்த வேலை கடினமானது”, என்று சொல்வது போல் லிக்கிறது என்றாள். வேலை செய்யும் அறையை நோக்கி நடந்துக் காண்டே அவள், "நான் உள்ளே பார்க்கலாமா? என கேடடாள். அந்த தியவர், “கூடாது; அவள் வேலை செய்யும் போது நாம் ஒருபோதும் ணி அறைக்குள் பார்க்க மாட்டோம் என்று நான் அவளிடம் திரும்பத் ரும்ப அளித்த வாக்குறுதியை மீற கூடாது”, என்றார். விடாப்பிடியாக ருந்த கிழவி, சற்றெ எட்டிப் பார்த்தால் அவளுக்கு தெரிய கூட ாய்ப்பில்லை என்று சொன்னாள்.

வ்வாறு சொல்லிக் கொண்டே அவள் வெளியே சென்று பணி அறை ன்னலை மெதுவாக சிறிதே நகர்த்தியவள், திகைக்கவும், அவளை றியாமலேயே மென்மையான சப்தம் வெளிவந்தது. “என்ன நடந்நதது?”, ன்ற முதியவர், விரைவாக வெளியில் வந்து “நீ என்ன பார்த்தாய்?”, ன்று கேட்டார். “இது ஒரு…” என்ற மனைவி, எப்படி சொல்வது என்று தரியாமல் வாயடைத்துப் போனாள். அறையின் உள்ளே எட்டி ர்த்ததும் கிழவரும் அதிர்ச்சியில் பேச்சற்றவரானார். ஏனென்றால், ந்த பெண் உட்கார்ந்திருக்க வேண்டிய இடத்தில் தறியின் எதிரே ஒரு ழகான வெள்ளை நாரை இருந்தது. அவர்களைப் பார்த்து, நாரை லையைக் குனிந்து, அதன் அலகால் தன் இறக்கைகளிலிருந்தே ன்றைப் பிடுங்கி, லாகவமாக அதை நூலுடன் நெய்தது.

ங்கு வந்த பெண் ஒரு நாரை”, மென்மையாக முதியவர் கூறினார். ார்த்தாயா, அழகிய ஆடைகளை நெசவு செய்ய தன் சிறகுகளையே பயோகிக்கிறாள். அவள் உடலிலிருந்து சிறகுகளைப் பிடுங்கிய டத்தில் எல்லாம் வெறும் புள்ளிகள் தெரிகின்றன”, என்றார் அந்த ழவர். அவரும், அவரது மனைவியும் சப்தம் போடாமல் சன்னலை டிவிட்டு வெளியே வந்தார்கள். தாங்கள் பார்த்த விநோதமான ாட்சியால் அவர்கள் திகைத்துப் போய்விட்டார்கள்.





மறு நாள் மாலை, அறையிலிருந்து வெளியே வந்த அந்த பெண் மிகவும் சோர்வாகவும் பலவீனமாகவும் இருந்தாள். ஆனால் அவள் கையில் ஒரு நேர்த்தியான ஜரி வஸ்திரம் இருந்தது.

"நீங்கள் என்னிடம் காட்டிய அன்பிற்கும், பாசத்திற்கும் என்னுடைய கடைசி நிவேதனமாக இதை ஏற்றுக் கொள்ளுங்கள்”," என்ற அவள் தம்பதியினரின் முன் அமர்ந்து, அரண்மனை பிரபு உங்களிடம் சொன்னது போல், அவர் மகளின் திருமண கிமோனோவுக்காக இந்த ஜரி வஸ்திரத்தை நான் நெய்திருக்கிறேன்”, என்றாள்.

கிழவருக்கும் அவரது மனைவிக்கும் பேச்சே எழவில்லை. முந்தைய இரவு பார்த்த அதே காட்சி அவர்களை வாட்டிக் கொண்டிருந்தது. அந்த பெண்ணே தொடர்ந்து கடந்த சில மாதங்களாக நீங்கள் எனக்காகச் செய்த அனைத்திற்கும் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன், ஏனென்றால் நான் எனது குடும்பத்திற்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்துவிட்டது." என்றாள்.

கிழவரின் கண்களில் இருந்து கண்ணீர் வர ஆரம்பித்தது. அவர் தன் மனைவியிடம் திரும்ப அவளும் அழுவதைக் கண்டார்.

"ஐயா," அந்த பெண் அவரை ஆறுதல்படுத்த கைகளை பிடித்து., அந்த பனிப்புயல் இரவில் நீங்கள் மீட்ட அதே நாரை தான் நான். எனது நன்றியை ஏதோ ஒரு வகையில் வெளிப்படுத்த விரும்பினேன். எனவே ஒரு இளம் பெண்ணின் வடிவத்தை எடுத்தேன். உங்களுக்கு உதவ, நான் ஜரி வஸ்திரத்தைப் பின்னிவிட்டேன். ஆனால் நேற்று இரவு நீங்கள் இருவரும் உங்கள் வார்த்தையை மீறி என் ரகசியத்தை அறிந்தீர்கள். குளிர்காலம் வருவதற்கு முன்பு நான் தெற்கே செல்ல வேண்டும்”, என்றாள்.

சோகம் நிறந்த கண்களுடன், அவள் வயதான தம்பதிகளைப் பார்த்தது விட்டு வெளியே ஓடினாள். ஓடும் போதே, கைகளை விரித்து, ஒரு வெள்ளை நாரையாக மாறினாள். அதன் பிறகு சிறகுகளை மடக்கி வானத்தில் பறந்தாள்.


பிரியா விடை கொடுத்து அனுப்பும்போது, “நீ எங்களுகுச் செய்த உதவிக்கு மிக்க நன்றி" என்று கிழவரும் அவரது மனைவியும் உரக்கக் கூவினார்க்ள்.

நாரை காற்றில் அவர்களின் தலைக்கு மேலே மூன்று முறை வட்டமிட்டது. முன்பு அந்த குளிர்கால மாலையில் செய்ததைப் போலவே கடைசியாக அவர்களைப் பார்க்க நாரை திரும்பிய போது உரத்த சப்தம் கேட்டது.

“விடை பெறுகிறேன், மிக்க நன்றி," என்று சொல்லுவதாக அந்த கிழவர் உணர்ந்தார்.

அது பறந்து போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தார். விலகி போகப் போக சிறியதா தெரிந்து, மாலை வானத்தில் பரவியிருந்த சிவப்பில் படிப்படியாக மறைந்தது..





நேரம் கடந்துவிட்டது. கோடையின் பிரகாசமான காட்சிகள் இலையுதிர்காலத்தின் அன்பான, மென்மையான வண்ணங்களாக மாறிவிட்டன, காற்று சுத்தமாகவும் அமைதியாகவும் இருந்தது, பயிர்கள் நன்றாக வளர்ந்திருந்தன. பறவைகள் தெற்கே சென்று கொண்டிருந்த அந்தி வேளையில், கிழவரும் அவரது மனைவியும் வானத்தைப் பார்த்தார்கள். ஒரு தனி நாரை வானத்தின் மேலே பறப்பதைக் கண்டு இந்த நாரை தன்னுடன் இருந்த இளம் பெண்ணாக இருக்குமோ என்று அவர் யோசிக்க ஆரம்பித்தார் ......

குளிர்கால அழகிய
இயற்கையை
கடுமையான பனி
போர்வையால்
போர்திருக்கும் வடக்கு
ஜப்பானின் கதை இது.
அந்த குளிர் கால
அழகை அலங்கரிக்கும்
காட்சிகளில் ஒன்று
தான் டான்சோ நாரை.



இந்த அழகான
பறவையின் தூய
வெள்ளை இறகுகளும்,
ஒரு அழகிய நடனத்தின்
ஆட்டம் போல்
கவர்ச்சியாக இருக்கும்
அதன் இயக்கமும்
குறிப்பிடதக்கது.

அங்குள்ளவர்கள்
டான்சோ நாரையை
நீண்ட ஆயுள், அமைதி
மற்றும் மகிழ்சியின்
அடையாளமாகக்
கருதுகிறார்கள்.

முற்றும்